முருகப்பெருமான் துணை

**மகான் கலிய நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

01.12.2021, புதன்கிழமை

1. ஞானச்சுடரேற்றி கலியினில்
ஞானிகள் பூசை செய்யத்தூண்டி
தானதரும வழிகளும் காட்டி
தவசியாக அருளும் அரங்கா
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் பிலவ தேள் திங்கள்
வரங்களென மூவைதிகதி புந்திவாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 15ம் நாள், 01.12.2021, புதன்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை கலியநாயனார் யானும்
அறிவிப்பேன் உலக நலம்பெற
வாசி வென்ற ஞானிகள் படை
வலம் வந்து பிரணவக்குடிலுக்கு
4. பிரணவக்குடிலுக்கு சக்தி தந்து
பெருந்தயவாகவே அருளிவர
சரவணசோதியே நமோ நமஎன
சதா செபதபம் புரிந்துவர
5. வருகவே மக்களின் வாழ்வில்
வளர்ச்சிகளும் மாற்றமும் காணும்
முருகா எனும் செபம்புரிந்து
முழுமைதரும் சன்மார்க்க வழியை
6. வழியை கடைப்பிடித்து நன்கு
வையகத்தார் தொடர்ந்து வர
தெளிவு ஞானமும் திடநிலையும்
தீட்சைவழி வரமாக அடைந்து
7. அடைந்துமே அரங்கன் தயவால்
அருள்பொருள் வளமும் கூடி
தடையற ஞானவழியும் தேறி
தவபலம் கூடி உலகோர் சிறப்பர்
8. சிறப்புதரும் சைவ நெறியை
சிவ நெறியாக தவநெறியாக
மறுப்பின்றி மக்கள் ஏற்கும்படி
மாதவசி அருளி வருக
9. வருகவே இந்த நெறி வளர
வையகம் பாதுகாப்பு பெறும்
தருமபலமும் பெருகப்பெருக
தரணியே எல்லா வளமும் காணும்

10. காணவே ஞானக் குடிலாம்
கந்தப் பெருமானே அருளுகின்ற
தானதரும பலம் கொண்ட குடிலாம்
தவராஜன் வாழும் பிரணவக்குடிலை

11. குடிலை கலியுகமக்கள் அனுகி
குருவரங்கன் ஆசிவழி நடக்க
இடரை கடந்து உலகோர் சிறப்பர்
இயம்பிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—